ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2474/66 - 2026 පෙබරවාරි මස 08 වැනි ඉරිදා - 2026.02.08

*2474/66 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்

2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் பிரிவு 4ஊ இன் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், அந்தச் சட்டத்தின் பிரிவு 3 உடன் சேர்த்து வாசிக்கப்படும், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திஸாநாயக்க ஆகிய நான், இந்த ஒழுங்குவிதிகள் மூலம் தகுதிபெறுவதற்கான அளவுகோல்களையும், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிப்புகள் அல்லது சலுகைகளையும் பரிந்துரைக்கிறேன்.

**அநுர குமார திஸாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ,
கொழும்பு 01,
2026, பெப்புருவரி 08.

**அட்டவணை**

**அட்டவணை: செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் ஏற்புடைய வரிச் சலுகைகள் என்பவற்றை இனம் காண்பதற்கு கருத்திட்டமொன்றுக்கான தகுதிபெறு அளவுகோல்கள்**

| வகுதி<br>*(I)* | துறைகள்<br>*(II)* | முதலீடு - ஐ.அ.டொ. மில்லியன்<br>*(III)* | குறைந்தபட்ச உள்ளூர் வேலை வாய்ப்பு உருவாக்கம்<br>*(IV)* | வரி விடுமுறை (நிறுவன வருமான வரி) ஆண்டுகளின் எண்ணிக்கை<br>*(V)* | *CID/VAT/PAL/CESS* விலக்களிப்பு<br>*(VI)* |
|---|---|---|---|---|---|
| A | உட்கட்டமைப்பு<br>சேவைகள் மற்றும் பயன்பாடுகள்<br>கெசினோக்கள் மற்றும் பந்தயம் மற்றும் சூதாட்டங்கள் தவிர்ந்த சுற்றுலா மற்றும் ஓய்வு விடுதி | 50 க்கு அதிகமான ஆனால் 150 க்கு விஞ்சாதது | 100 | 6 | கருத்திட்டச் செயற்படுத்துகை காலத்தில் மூலதனப் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பொருட்களை இறக்குமதி செய்தல் |
| | | 150க்கு அதிகமான ஆனால் 300 க்கு விஞ்சாதது | 100 | 8 | |
| | | 300க்கு அதிகமானது | 100 | 10 | |



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| வகுதி (I) | துறைகள் (II) | முதலீடு - ஐ.அ.டொ. மில்லியன் (III) | குறைந்தபட்ச உள்ளூர் வேலை வாய்ப்பு உருவாக்கம் (IV) | வரி விடுமுறை (நிறுவன வருமான வரி) ஆண்டுகளின் எண்ணிக்கை (V) | *CID/VAT/PAL/CESS* விலக்களிப்பு (VI) |
|---|---|---|---|---|---|
| B | தயாரிப்பு | 50க்கு அதிகமான ஆனால் 100க்கு விஞ்சாதது | 250 | 5 | கருத்திட்டச் செயற்படுத்துகை காலத்தில் மூலதனப் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பொருட்களை இறக்குமதி செய்தல் |
| | | 100க்கு அதிகமான ஆனால் 150க்கு விஞ்சாதது | 250 | 8 | |
| | | 150க்கு அதிகமானது | 250 | 10 | |
| C | விவசாயம்<br>கல்வி, தொழில்நுட்ப நிறுவனங்கள்,<br>தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 50க்கு அதிகமான ஆனால் 100க்கு விஞ்சாதது | 50 | 5 | |
| | | 100க்கு அதிகமான ஆனால் 150க்கு விஞ்சாதது | 50 | 8 | |
| | | 150க்கு அதிகமானது | 50 | 10 | |

இந்த ஒழுங்குவிதகளின் நோக்கங்களுக்காக ;

1. மேலே உள்ள அட்டவணையின் நிரல் (V) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன வருமான வரி விலக்களிப்புகள், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்படி தீர்மானிக்கப்பட்ட செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றின் அனைத்து வருமானங்கள் மற்றும் இலாபங்களுக்கும் ஏற்புடையதாவதுடன், அத்தகைய விலக்களிப்பு வணிக நடவடிக்கைகள் ஆரம்பமாகும் திகதியிலிருந்து தொடங்கும் ;

2. CID - சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) கீழ் விதிக்கப்படும் சுங்க இறக்குமதித் தீர்வை.

   VAT - 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் பெறுமதி சேர் வரி.

   PAL - 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு.

   CESS - 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் செஸ்வரி.

3. மேலே உள்ள அட்டவணையின் நிரல் (VI) இன் கீழ் பிரயாணம் அல்லது தனிப்பட்ட பயன்பாட்டு நோக்கம் கொண்ட மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு விலக்களிக்கப்படாது.

4. வரி விலக்களிப்புக் காலம் முடிவடைவந்ததன் பின்னர், தற்போது நடைமுறையிலுள்ள தொடர்புடைய சட்டங்களின் ஏற்பாடுகளின்படி, கருத்திட்டம் வரி செலுத்த வேண்டியிருக்கும்.

5. கருத்திட்டச் செயற்படுத்துகைக் காலம் என்பது இலங்கை முதலீட்டுச் சபையுடனும் நிறுவனத்துடனும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிப்பட்டுள்ள திகதியிலிருந்து தொடங்கி இலங்கை முதலீட்டுச் சபையினால் சான்றளிக்கப்பட்ட வணிக நடவடிக்கைகள் தொடங்கும் திகதியில் முடிவடையும் காலமாகும்.

EOG 02 - 0082

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது